உ

கடவுள் துணை.

பெரியபாளையம்

மாரியம்மன் பதிகம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

26

உ

கடவுள் துணை.

பெரியபாளையம்

மாரியம்மன்பேரில் பதிகம்.

காப்பு-வெண்பா.

பன்னுபுகழ்பெரியபாளையத்து மாரியின்மேல்
சொன்னபாவிற்குத் துணையாவான் துன்னுமலர்[ல்
வரய்க்குஞ்சரத்தான் செய்வல்பிணியைதீர்த்தருண
வாய்க்குஞ்சரத்தான் மகிழ்ந்து.

ஆசிரிய விருத்தம்.

தார்தங்குமற்குழலி லங்கபிறைநுதலித்தரித்த
சிந்தூரமிலங்கச்சயமேவுவிற்புருவமுங்கருணைபொழி
கின்றதத்சசோரருதநேத்திரமும்;வார்தங்குகயலொ
டுசிறந்தசண்பகநமசிவசனுமிர் தக்கெரவ்வையாய் மா
சற்ற சிறுநகையிலங்நவரதா பயவளங்கொல் காதல
மிலங்கப், பார்தங்குகொடி யிடையிலங்க கிண்கிணி
யொடுபதித்தநூபுரமிலங்கு, பங்கயமதாகுசுபமங்க
ளதமாயவ்வருபதத்துணையை யென்றுகாண்பேன்
ஏர்தங்குசெங்நெல்வயல்சூழ் பெரியபாளையத்தெல்லை

யிலமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல்லம்மைமகம்மாரியே. 1

சகலபுவனேஸ்வரி யனுதரட்சகியதுலர்சந்ததந் துதிசெய்நிமலி, தத்வபரிபூரணிமகத்தவமிகுகாரணி ஜனார்த்தனி யனந்தசயனி, சுகவிரதபூஷணிதுலங்கு கல்யாணி சுலக்ஷணிவிதக்ஷணகுணி, ஜோதிர்மயான ந்தசேஷநங்கனிவரதருக்ஷி, கருணைகடாக்ஷி, விகசித மிகுந்தமுக சந்திரவிம்பப் பிரபவிஜயசிங்காரிவிமலி, வீறுதற்பரி சர்வலோகபூஜித தனயவிசாலினியனந் தரூபி, இகபரநதம்பலரும் பெரியபாளையத்தெல்லை யிலமர்ந்துவாழும், எல்லனனவெளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல்லம்மைகாரியே. 2

உலகினிலடங்காதபேய்பில்லிசூனியமுரத்தகா ட்டேரிமற்று,முன்னரியப் பூதப்ரேதமோகினிமுனி களொழியாது கொடுமைசெய்யும், விலகாயசூலைபெ றுவயிறு குஷ்டங்கொடியமேகரோகங்கள்மண்டை, வேதையொடு கைகால்பிடிப்பு நீரிழவு பலவிதமான வெம்பிணிகளும், கலசமிடுபகைஞர்வஞ்சகமுநின்னு டையபதகமலமதனைச்சிந்தையிற், கருதிநிமிஷப்பொ ழிதுதியானிக்கிலிவையெலாங்கானனீரென்றேடுமே இலகுபுயனுலவி பொழில்சூழ் பெரியபாளயத்தெல்

லையிலமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்சூரி நல்ல
ன்ன நடைவீரி எல்லம்மைமகமாரியே. 3

ஆதித்தவாரங் கடோறுநின் சன்னதியடுத்தன்
புகூர்ந்துவந்தே, அவரவர்கள்கோரிய பிரார்த்தனைக
டலறுதகண்ட தீபங்கள்வைத்துங், கோதற்றவெள்
ளிபொன்னுற்கண்ணடக்கமொடு கூற்றியபலவுறுப்பு
ங்குழவியொடு தொட்டினுஞ்சிலவிம்ப வண்மையுங்
குணமொடுசெலுத்திநெஞ்சம், பேதித்திடாமல்வேப்
பஞ்சிலைபூண்டொளி பிறங்கும்மாடவீதிப், பிரதட்ச
ணஞ்செய்வதன்றியுஞ்செடிலாடல் பேணிப்புரிந்து
மகிழும் எதிர்பெரும்புகழ்மிகும் பெரியபாளையத்
தெல்லையிலமர்ந்துவாழும்,எல்லன்னவொளிர்சூரிநல்
லன்னநடைவீரி எல்லம்மைமகமாரியே. 4

செப்பரியசிறுவர்முதன்மற்றுமூப்பருமுனைச்சி
ந்தியாதவர்களில்லைத், தெளிவிலாதவர்கட்கடுத்தபெ
ரியம்மைசின்னம்மை பலபெய்துநாளும்,ஒப்பற்றவே
ப்பிலைதனைக் கையிலளித்தன்பு முனையமுக்கிநெஞ்ச
முருகும்படிச்செய்து தெரிவிக்குநின் பெருமையொ
ருவராற்சொல்லவசமோ, தப்பிநின்முத்திரைதரித்தி
டாத்தேவருந் தருவுமாந்தருமுளர்கொலோ, சர்வ
சீவரத்தும தயாபரிமகாதேவி சாம்பவீயமலைவடுகிஇ

ப்புவியனைத்துமகிழும் பெரியபாளையத் தெல்லையி லமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்சூரி நல்லன்ன நடைவீரிஎல்லம்மை மகம்மாரியே. 5

சிங்கவாகனமேரி யெங்கும்பிரசித்தமாய் வேத மாதர்கள் துதிக்கத்,திரள்பூபகனமார்ப்பரிக்கத்தடிக் கார்சேவகர்கள் சூழ்ந்து வரவேசங்கொளி யுடுக்கை யொடுபம்பையொடு சிங்கநாதம்பலமுழங்க,வாரிசத் சரணகிண்சிலம்புசிறு தண்டைசதங்கையொலிசெய் யநீடுஞ்செங்கைவளையொலி கலகலென்றிடவடுத்து னது சிந்தைகளிகூர்ந்துநாளுஞ், செகமீதுலாவிவரு மகாமந்திரசிரோன்மணிசகஸ்த்ரநாமி, இங்கிதமிகுந் தநதிசூழ் பெரியபாளையத்தெல்லையிலமர்ந்துவாழும், நல்லன்னவொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம் மைமகம்மாரியே. 6

அகலாதவஞ்சபர பஞ்சமாயையிலுள மடுத்தி ணியமனைவிமக்க, ளாம்பந்தபாசக்கடற்குண்மூழ்கிப் படுமலைச்சதிவ்வள வென்றறியான், புகலமுடியாதெ ழிதவேடிடங்கொள்ளாது புந்திவைத்திந்தவேளைப், புன்மையேனாயினும் எனைத்தடுத்தாண்டருள் புரிந் திடாயெனாலுலகிலேன்,தனைமேவுகின்னுபயபொற் றாபதாம்புயமதே தஞ்சமென்றாலிரங்காத், தன்மை

டென்னேபெற்ற தாய்தனையுனழுகணீர்த் தனைத்து
டைத்தாட்கொளாமல், இகழமனம்வருமோசொலு
ம்பெரியபாளையத்தெல்லையி லமர்ந்துவாழும், எல்ல
ன்ன வொளிர்சூரி நல்லன்னநடைவீரி எல்லம்மை
மகம்மாரியே. 7

ஒருநாளுமென்கவலை யொழியவில்லையே சிந்தை
யொருவழியு நிற்கவில்லையே.யுன்னரியவன்மிடியரைக்
கனமுபெனைவிட்டொதுங்கவில்லையேநாளெலாங்கரி
நாளலாற் சுகிர்தநாள்வருவதில்லையேயென்கன்மத்தை
யென்னசொல்லுகேன்;காசினியிலென்போலுமொரு
கொடியபாவிநன் கண்டதில்லையேயனுதினந் திருநாள்
சிறந்த தத்வாதிபரிபூரணி ஜெகம்பெற்ற சிந்தாமணி
தேவியானவரதகல்யாணிநாரணிவேணி திருவருள்பு
ரிந்தாளுவாய். இருநாவலஞ்சோலை சூழ்பெரியபாளை
யத்தெல்லையிலமர்ந்துவாழும்,எல்லன்னவொளிர்சூரி
நல்லன்னநடைவீரி எல்லம்மைமகமாரியே. 8

ஆதாரநீயெனக் கருதியிந்நாள்வரையி லன்புகூ
ர்ந்துன்னைநம்பி, ஆதிமுதலாயடுத்துத்தொண்டுசெய்
துமனுவளவுநெஞ்சுருகாமலே, சூதாயிருக்கின்றதெ
ன்கொல்சுதனென்னுஞ் சுதந்தர மெனக்கில்லையோ,
சொல்லரியதாயு நீயல்லையோயானு நின்றொடர்களி
லொருவனன்றோ, வேதாகமப்புராணங் கலைக்யானம்

விளம்பரியநின்கீர்த்தியை, வினையேனெடுத்தியம்பத் தகாதென்றதோ வேறென்னபிழைசெய்தேனோ, ஏதாகிலுஞ் சொல்லுவாய் பெரியபாளையூத்தெல்லையிலமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்சூரி நல்லன்ன நடைவீரி எல்லம்மைமகம்மாரியே. 9

தபமிகுத்திடுகின்றசமதக்கினிபத்தினியாய்த்தனையர்க டமைப்புயந்துய்,சத்கர்மசீலியால் நித்தியவிநோதியாய்ச்சாஸ்வதசுயாதீதியாய், உபராகவில்லறநடாத்தியற்புதமானவுயர்ந்தமழுவைத்தரித்து, ஒப்பரியவரசகுலவைரியாய்மலைநாட்டையுண்டாக்கிடும்புனிதனும்,செயமேவு பரசுராபனையீன்று சமயபுரஜெயமுற்றகொல்லாபுரம், செப்பரியபடைவேடுதென்னூற்றுகாடெனுஞ் சீர்மேவுகோயில்கொண்டு, இமராசனுலகுலோர்புகழ்லோகமிதுவெனு மெழிற்பெரியபாளையத்தெல்லையிலமர்ந்துவாழும்,எல்லன்னவொளிர்சூரி நல்லன்னநடைவீரிஎல்லம்மைமகம்மாரியே.

சந்ததமுமாறுத வெம்பிணிகள்பலவுந் தடுத்தள்வையென்று மகலாத்தன்மைமிகு நல்குரவகற்றுவாயென்றுஞ் சதாயுடந்தருள்வையென்றும்விந்தைமெறுதர்மார்த்த காமமோட்சச்சதுர் விதச்சித்தியு

ஞ்சிறந்து, வீறுபலசாம்பிராஜ்ய சித்தியு மளித்திம்
மைவேண்டுவது தருவையென்றும், செந்தமிழினற்
பதிக மொன்றுசூட்டச்சிந்தை யிற்கருதியேகூறினே
ன், திருவுளமிரங்கிரீயங்கீயகரித்துநின் சீரருள்புரிந்
தாளுவாய், இந்திரலோகத்தை யிகழும்பெரியபாளை
யத்தெல்லையி லமர்ந்துவாழும், எல்லன்னவொளிர்
சூரிநல்லன்னநடைவீரி எல்லம்மைமகம்மாரியே. 10

கட்டளைக் கலித்துறை.

மாதேகமலமலர்வாழுஞ்செவ்வியுரைமலரோன்
ஆதாரநாவுரைவாணி யிந்திராணியுமராவமுடன்
போதானதுகொடுபோற்றிப் பணிந்திடும்பூரணியே
வாதாவருள்செய்யொணாத நற்பாளையம்வாழனையே
சேவித்தபேர்க்கருள் செய்யும்தயாபரிதேவியுனை
பாவித்தவென்னுடைபாவங்கள்யாவும்பரிகரித்தாள்
கோவித்திடிலடியேய பெங்கனுய்குலன்கோகனக
வாவித்திடம்பலசூழ் பாழத்தினில்வாழனையே.

பெரியபாளையம் மாரியம்மன்பதிகம்.

முற்றிற்று.